# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, காவற்றுறை துப் பணிகள் (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, மே மாதம் 19 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 16.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

**2006 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க காவற்றூதுப் பணிகள் (திருத்தச்) சட்டம்**

[*2006 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 74/2003*

**காவற்றூதுப் பணிகள் சட்டத்தைத் திருத்துவதற்கும், காவற்றூது உறவுகள் மீதான வியன்னா சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக* :-

**1.** *இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, காவற்றூதுப் பணிகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*சுருக்கப் பெயர்.*

**2.** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றூதுப் பணிகள் சட்டம், அச்சட்டவாக்கத்துக்கான விரிவுப் பெயரை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பெயரை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது* :-

*1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்துக்கான விரிவுப் பெயரை மாற்றீடு செய்தல்.*

> *"காவற்றூது உறவுகள்மீதான வியன்னா சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும் ; வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் தூதாண்மை மற்றும் காவற்றூது அலுவலர்களினால் நிறைவேற்றப்படும் காவற்றூதுப் பணிகளை ஆளுவதற்கும், வெளிநாடுகளைச் சேர்ந்த காவற்றூது அலுவலர்களுக்கு இலங்கையினுள் விடுபாட்டுரிமைகளையும், சிறப்புரிமைகளையும், பணிகளையும் வழங்குவதனை ஆளுவதற்கும் ஒரு சட்டப்படியான முறைமையை ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்."*.

முதன்மைச் சட்டவாக்கத்தின் சட்டமாக்கல் வாசகத்தை மாற்றீடு செய்தல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கமானது, அச்சட்டவாக்கத்துக்கான சட்டமாக்கல் வாசகத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

“முன்னுரை. (இதனகத்துப்பின்னர் “சமவாயம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) காவற்றூது உறவுகள் மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டினால், ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தி மூன்றாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் இருபத்திநான்காம் தேதியன்று வியன்னாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாதலாலும் ;

அத்துடன் மேற்சொல்லப்பட்ட சமவாயம், ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்தேழாமாண்டு மாச்சு மாதம் பத்தொன்பதாம் நாளன்று வலுவுக்கு வந்ததாதலாலும் ;

அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இசைவுச் சாதனமொன்றை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் தலைமையதிபதியிடம் வைப்பிடுவதன்மூலம் மேற்சொல்லப்பட்ட சமவாயத்துக்கு இலங்கை இசைவளிப்பதற்கு எண்ணுகின்றதாதலாலும் ;

அத்துடன் மேற்சொல்லப்பட்ட சமவாயத்தின்கீழ் இலங்கைக்குள்ள கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் சட்டவாக்க ஏற்பாட்டைச் செய்வது அவசியமாகவுள்ளதாதலாலும் ;

ஆகவே, இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-”.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவுக்கு நேர்முன்னர் பின்வரும் தலையங்கத்தை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்ட வாக்கம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவுக்கு முன்னர் தலையங்கத்தை உட்புகுத்துதல்.*

"பாகம் I

**காவற்றூது உறவுகளைத் தாபித்தலும் காவற்றூதுப் பணிகளை அடையாளங்காணுதலும்**"

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"காவற்றூது உறவுகளைத் தாபித்தலும், காவற்றூதுப் பணிகளைப் புரிவதற்குக் காவற்றூது அலுவலர் களுக்கு அதிகார மளித்தலும்.*

2. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, காவற் றூது உறவுகள், இரு அரசுகளுக்கிடையே தூதாண்மை உறவுகள் தாபிக்கப்படுவதன் விளை வாகத் தாபிக்கப்படுவனவாகக் கருதப்படுதல் வேண்டும். ஏற்கும் அரசின் ஆள்புலத்தில் காவற்றூதுப் பணியகமொன்று தாபிக்கப்படலாம்.

(2) காவற்றூது உறவுகள் தாபிக்கப்படுவதன் விளைவாக, காவற்றூதுப் பணிகள், காவற்றூதுப் பணியகமொன்றின் மூலம் காவற்றூது அலுவல ரொருவரினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், காவற்றூதுப் பணிகள், சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தூதாண்மைத் தூதரகங் களினாலும் பிரயோகிக்கப்படலாம்.

(3) காவற்றூது அலுவலர் ஒவ்வொருவரும், அவர் எந்த வெளிநாட்டு அரசுக்குத் தத்துவம் பெறு கின்றாரோ அல்லது நியமிக்கப்படுகின்றாரோ அந்த வெளிநாட்டு அரசினுள், ஏதேனும் எழுத் திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் காவற்றூதுப் பணியை அல்லது சமவாயத்தின் நியதிகளின்படி அடையாளங் காணப்பட்டவாறான வையும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான வையுமான எவையேனும் காவற்றூதுப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றார் ;

ஆயின், அத்தகைய பணியின் நிறைவேற்றுகை அத்தகைய வெளிநாட்டு அரசின் சட்டங்களினால் தடைசெய்யப்பட்டிருத்தலாகாது.

(4) முதன்மைச் சட்டவாக்கத்தின் 3,4,5,6,7 ஆகிய பிரிவுகளில் தரப்பட்டுள்ள பணிகள் அட்ட வணையில் தரப்பட்டுள்ள பணிகளுடன் சேர்த்து மேலதிகமாக, காவற்றூதுப் பணியகமொன்றின் காவற்றூது அலுவலர்களினால் பிரயோகிக்கப்படு தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு காவற்றூதுப் பணியகமும், அதன் காவற்றூதுப் பணிகளை எந்தக் காவற்றூது வளவுகளிலிருந்து நிறைவேற்றவேண்டுமோ அந்தக் காவற்றூது வளவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென் பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும் :-

"காவற்றூது அலுவலர் களினால் தூதாண்மைச் செயல்கள் புரியப்படுதல்.

2அ. அனுப்பும் அரசொன்றுன்றுக்குத் தூதாண்மைத் தூதரகமெதுவும் இல்லாதவிடத் தும், மூன்றாம் அரசொன்றின் தூதாண்மைத் தூதரகத்தினால் அது பிரதிநிதித்துவப்படுத்தப் படாதவிடத்தும், காவற்றூது அலுவலரொருவர், ஏற்கும் அரசின் சம்மதத்துடனும் அவரது காவற் றூது அந்தஸ்திற்குப் பங்கமின்றியும், தூதாண் மைச் செயல்களைப் புரிவதற்கு அதிகாரமளிக்கப் படலாம் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய செயல் களைப் புரிதலானது, தூதாண்மைச் சிறப்புரிமை களையும் விடுபாட்டுரிமைகளையும் கோருவதற் கான உரிமையை அத்தகைய காவற்றூது அலுவல ருக்கு எவ்வகையிலும் அளித்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் IIஆம், IIIஆம் பாகத்தை உட்புகுத்துதல்.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகங்கள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் பாகம் II ஆகவும் (பிரிவுகள் 7அ, 7ஆ, 7இ, 7ஈ, 7உ, 7ஊ, 7எ, 7ஏ, 7ஒ, 7ஓ, 7ஔ, 7க, 7ங) மற்றும் பாகம் III ஆகவும் (பிரிவுகள் 7ஞ, 7ட, 7ண, 7த, 7ந, 7ப, 7ம மற்றும் 7ய) பயனுறுதலும் வேண்டும் :-

"பாகம் II

**இலங்கையில் காவற்றா துப் பணியகத்தின் தொழில்முறையின் விடுபாட்டுரிமைகளும், வசதிகளும், சிறப்புரிமைகளும்**

காவற்றா து வளவுகளின் முழு நிறைக் காப்பு.

7அ. (1) இலங்கையிலுள்ள காவற்றா துப் பணியகத்தின் பணிகளைப் புரிவதற்கான எல்லா வசதிகளையும், ஏற்கும் அரசு அளித்தல் வேண்டும்.

(2) காவற்றா துப் பணியகமொன்று எந்தக் காவற்றா து வளவுகளிலிருந்து அதன் பணிகளை நிறைவேற்றுகின்றதோ அந்தக் காவற்றா து வளவுகள், இதனகத்து ஏற்பாடு செய்யப்பட்டவாறாக முழு நிறைக் காப்புடையனவாதல் வேண்டும்.

(3) ஏற்கும் அரசின் அதிகாரிகள், அனுப்பும் அரசின் காவற்றா துப் பணியகத் தலைவரின் சம்மதத்துடனன்றி வேறுவகையாக, காவற்றா துப் பணியகத்தினது வேலையின் நோக்கத்துக்காகப் புறநீங்கலாகப் பயன்படுத்தப்படும் காவற்றா து வளவுகளின் அப்பாகத்தினுட் பிரவேசித்தலாகாது.

(4) ஏதேனும் தலையீட்டுக்கு அல்லது சேதத்துக்கு எதிராகக் காவற்றா து வளவுகளைப் பாதுகாப்பதற்கும், காவற்றா துப் பணியகத்தின் ஏதேனும் அமைதிக்குலைவைத் தடுப்பதற்கும் ஏற்கும் அரசு தோதான நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

*வரிவிதிப் பிலிருந்து விலக்களித்தல்.*

7ஆ. அனுப்பும் அரசொன்றின் காவற்றூதுப் பணியகத்தின் வதிவிடமும் அனுப்பும் அரசின் காவற்றூது வளவுகளும் எம்மட்டத்திலுமான எல்லாத் தேசிய வரிவிதிப்பிலிருந்தும் விலக்களிக் கப்படுதல் வேண்டும் : ஆயின், அத்தகைய விலக் களிப்பு, அளிக்கப்பட்ட குறித்த சேவைகள் தொடர் பில் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் கொடுப்பனவுக்கு நீடித்தலாகாது.

*காவற்றூதுச் சுவடிக்கூடம் அணுகொணாத் தன்மையுடையது.*

7இ. காவற்றூதுப் பணியகமொன்றின் காவற் றூதுச் சுவடிக்கூடம் அணுகொணாத் தன்மையு டையதாதல் வேண்டும்.

*ஏற்கும் அரசினுள் நடமாடுவதற் கான சுதந்திரம்.*

7ஈ. ஏற்கும் அரசானது, அதன் ஆள்புலத்தி னுள், காவற்றூதுப் பணியகமொன்றின் எல்லா உறுப்பினர்களுக்கும் நடமாடுவதற்கும் பிரயாணஞ் செய்வதற்குமான சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும் : ஆயின், எவ்வாறாயினும், இச்சுதந்திர மானது, தேசியப் பாதுகாப்புக் காரணங்களுக்காக விதிக்கப்படக்கூடிய எவையேனும் மட்டுப்பாடு களுக்கு அமைந்தாதல் வேண்டும்.

*தொடர்பு கொள்வதற்கான சுதந்திரம்.*

7உ. (1) காவற்றூதுப் பணியகத்தின் எல்லா அலுவலகமுறையான நோக்கங்களுக்காகவும், அதன்பாலான தொடர்புகொள்வதற்கான சுதந் திரத்தை ஏற்கும் அரசு உறுதிப்படுத்துதலும் பாது காத்தலும் வேண்டும். காவற்றூதுப் பணியகமா னது, அதன் பணிகளை நிறைவேற்றுகையில் தொடர்புகொள்வதற்கான தோதான தொடர்பு வழிவகைகளைப் பயன்படுத்தலாம்.

(2) காவற்றூதுப் பணியகத்தின் காவற்றூதுப் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாகக் காவற் றூதுப் பணியகத்தின் அலுவலகமுறையான கடிதத்தொடர்பு அணுகொணாத் தன்மையுடைய தாதல் வேண்டும்.

*(3) காவற்றூதுப் பையானது திறக்கப்படுதலோ அல்லது தடுத்துவைக்கப்படுதலோ ஆகாது என்பதுடன், அலுவலகமுறையான கடிதத்தொடர்புகளையும் புறநீங்கலாக அலுவலகமுறையான பயன்பாட்டுக்கு உட்கருதப்பட்ட ஆவணங்களையும், பொருட்களையும் மட்டுமே அது கொண்டிருத்தல் வேண்டும் :*

*ஆயின், மேற்சொல்லப்பட்ட அலுவலகமுறையான கடிதத்தொடர்பு அல்லாத வேறு எதனையும் பையானது கொண்டுள்ளதென ஏற்கும் அரசின் இயைபான அதிகாரிகளின்பால் நியாயமானவொரு சந்தேகம் இருப்பின், அனுப்பும் அரசின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரினால் தமது முன்னிலையில் அந்தப் பை திறக்கப்பட வேண்டுமென அவர்கள் வேண்டுகோள் விடுக்கலாம். அவ்வேண்டுகோள் மறுக்கப்படின், அப்பையானது அதன் தொடக்க நாட்டுக்கு உடனடியாகத் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும்.*

*(4) காவற்றூதுப் பையை இடைப்பெயர்வதற்குப் பொறுப்பிக்கப்பட்ட காவற்றூது விரைதூதருக்கு, அவரது அந்தஸ்தையும், காவற்றூதுப் பையாகவமைகின்ற பொதிகளின் எண்ணிக்கையையும் சுட்டிக்காட்டுகின்ற அலுவலகமுறையான ஆவணமொன்று வழங்கப்படுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும் காவற்றூதுப் பணியகமொன்று, பையானது எந்தக் கப்பலில் அல்லது வானூர்தியில் கொண்டுவரப்படுகின்றதோ அந்தக் கப்பலின் அல்லது வானூர்தியின் கபிதானிடமிருந்து நேரடியாகப் பையை உடைமையில் எடுப்பதற்கு அதன் உறுப்பினர்களுள் ஒருவரை அனுப்பலாம்.*

*அனுப்பும் அரசின் நாட்டவருடன் தொடர்புகொள்வதற்குக் காவற்றூது அலுவலருக்குள்ள உரிமை.*

*7ஊ. (1) காவற்றூது அலுவலர் ஒருவர், அனுப்பும் அரசின் நாட்டவருடன் சுதந்திரமாக தொடர்புகொள்வதற்கும் அரசின் காவற்றூது அலுவலர்களை அணுகுவதற்கும் உரிமைகொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அதேபோன்று அனுப்பும் அரசின் நாட்டவர்களும், அனுப்பும் அரசின் காவற்றூது அலுவலர்களை அதேவிதமாக அணுகுவதற்கும் அவர்களுடன் தொடர்புகொள்வதற்கான சுதந்திரத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

(2) ஏற்கும் அரசின் இயைபான அதிகாரிகள் அத்தகைய அரசின் நாட்டவரொருவர் கைதுசெய்யப்பட்டால் அல்லது மறியற்சாலைக்கு பாரப்படுத்தப்பட்டால், அல்லது விளக்கம் முடிவுறும் வரை கட்டுக்காப்பில் அல்லது ஏதேனும் முறையில் தடுத்துவைக்கப்பட்டால், அனுப்பும் அரசின் காவற்றூதுப் பணியகத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். ஆயின், அத்தகைய விடயங்களில், காவற்றூது அலுவலர்கள், ஏற்கும் அரசின் கூட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இயைய, அத்தகைய நாட்டவர்களைச் சென்று பார்ப்பதற்கும், அவர்களுடன் உரையாடுவதற்கும் அல்லது கடிதத் தொடர்புகொள்வதற்கும் அவசியமானவிடத்து அத்தகைய நாட்டவர்களுக்கான சட்டப்படியான பிரதிநிதித்துவத்தை ஒழுங்கேற்பாடு செய்வதற்கும் உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

அனுப்பும் அரசொன்றின் காவற்றூது அலுவலரொருவருக்குத் தகவல் தெரிவிக்கப் படுதல்.

7எ. இயைபான காவற்றூதுப் பணியகத்துக்கு -

(அ) அனுப்பும் அரசின் நாட்டவரொருவரின் இறப்புத் தொடர்பான தகவலை ;

(ஆ) அனுப்பும் அரசின் நாட்டவரொருவராகவுள்ள பராயமடையாத ஆளொருவருக்காக அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளொருவருக்காகப் பாதுகாவலரொருவரை அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளரொருவரை நியமிப்பதற்கான அவசியத்தை ; அல்லது

(இ) அனுப்பும் அரசின் கலனொன்று அல்லது வானூர்தியொன்று தொடர்பான ஏதேனும் கப்பற்சேதம் அல்லது விபத்துத் தொடர்பிலான தகவலை ;

தெரிவித்தல், ஏற்கும் அரசின் இயைபான அதிகாரிகளின் கடமையாதல் வேண்டும்.

*இயைபான அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுதல்.*

7ஏ. அனுப்பும் அரசின் காவற்றுாது அலுவலர்கள், ஏற்கும் அரசின் சட்டங்களினாலும் ஒழுங்கு விதிகளினாலும் அனுமதிக்கப்படும் அளவுவரை, அவர்களின் காவற்றுாதுப் பணிகளின் பிரயோகம் தொடர்பான எல்லாக் கருமங்கள் பற்றியும் ஏற்கும் அரசின் இயைபான அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுவதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

*காவற்றுாதுக் கட்டணங்களும் இறுப்பனவுகளும்.*

7ஐ. காவற்றுாதுப் பணியகமானது, ஏற்கும் அரசின் ஆள்புலத்தினுள் அதன் காவற்றுாதுப் பணிகளை நிறைவேற்றுவதற்காக, அது தொடர்பில் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய கட்டணங்களையும் இறுப்பனவுகளையும் அறவிடலாம். கட்டணங்களாகவும் இறுப்பனவுகளாகவும் அவ்வாறு அறவிடப்படும் தொகைகள், ஏற்கும் அரசின் எல்லா வருமதிகளிலிருந்தும் வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

*காவற்றுாது அலுவலர்கள் முழுநிறைக் காப்புடையோராக விருத்தலும் கைது செய்யப்படுதல் முதலியவற்றுக்கெதிரான சுதந்திரமும்.*

7ஓ. (1) எல்லாக் காவற்றுாது அலுவலர்களும் எல்லா நேரங்களிலும் உரிய மரியாதையுடன் நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், காவற்றுாது அலுவலர்கள், (பாரதூரமான குற்றச்செயலொன்றைப் புரிந்தமைக்காகவும் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் முடிவொன்றைப் பின்பற்றியும் அல்லாமல்) கைதுசெய்யப்படுதலுக்கு அல்லது தடுப்புக் காவலுக்கு அல்லது அவர்களின் சொந்தச் சுதந்திரத்தின் மீதான வேறேதேனும் வகையினதான மட்டுப்பாட்டுக்கு ஆளாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான பாரதூரமானவொரு குற்றச்செயலுக்காகக் காவற்றுாது அலுவலரொருவர் கைதுசெய்யப்படும் அல்லது தடுப்புக்காவலில் இடப்படும் பட்சத்தில், ஏற்கும் அரசானது அத்தகைய நிகழ்வு பற்றிக் காவற்றுாதுப் பணியகத்தின் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும். கைதுசெய்யப்பட்ட ஆள் காவற்றுாதுப் பணியகத்தின் தலைவராகவே இருப்பின், தூதாண்மை வழிவகைகள்மூலம் அத்தகைய நிகழ்வை அவர்கள், ஏற்கும் அரசுக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) காவற்றூது அலுவலர்களும் காவற்றூது ஊழியர்களும், அவர்களின் காவற்றூதுப் பணிகளின் பிரயோகத்தில் புரியப்படும் செயல்கள் தொடர்பில் ஏற்கும் அரசின் ஏதேனும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு அல்லது நிருவாக அதிகாரத்துக்கு அமைந்தோராதலாகாது :

ஆயின், எவ்வாறாயினும், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் —

(அ) அனுப்பும் அரசின் முகவரொருவராக வன்றி வேறுவகையாக ஒரு காவற்றூது அலுவலரினால் செய்துகொள்ளப்படும் ஏதேனும் ஒப்பந்தத்துக்கான ; அல்லது

(ஆ) ஏற்கும் அரசில் ஏற்படும் விபத்தொன்றிலிருந்து எழுகின்ற மூன்றாம் திறத்தவர் சேதத்துக்கான,

அத்தகைய அலுவரொருவருக்கு அல்லது காவற்றூது ஊழியரொருவருக்கு எதிராகத் தொடுக்கப்படும் குடியியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(4) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டதனைத் தவிர, காவற்றூது அலுவலர்கள், ஓர் இறுதித் தீர்ப்பின் பயனைக்கொண்ட தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் நீதிமுறை முடிபொன்றை நிறைவேற்றுகையில் தவிர, மறியற்சாலைக்குப் பாரப்படுத்தப்படுதலாகாது அல்லது அவர்களின் சொந்தச் சுதந்திரத்தின் மீதான வேறெந்தவகையினாலுமான மட்டுப்பாட்டுக்கு ஆளாதலாகாது.

(5) காவற்றூது அலுவலரொருவருக்தெிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுமிடத்து, அத்தகைய அலுவலர் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் முன்னர் தேன்றும்படி கட்டளையிட்டழைக்கப்படும்போது அவ்வாறு செய்தல்

வேண்டும். ஆயின், அத்தகைய எவையேனும் வழக்கு நடவடிக்கைகள், அத்தகைய அலுவலரின் அலுவலகமுறையான பதவியைக் கவனத்துட் கொண்டும், (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப் பட்டவாறு அல்லாமலும், காவற்றா துப் பணி களின் பிரயோகத்தைப் பெருமளவில் தடைசெய் யாத அத்தகையவொரு முறையிலும், அவருக்கான உரிய மரியாதையுடன் நடாத்தப்படுதல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள சூழ்நிலை களைப் பின்பற்றி காவற்றா து அலுவலரொரு வரைத் தடுத்துவைப்பது அவசியமாக வருமிடத்து, ஏற்கும் அரசு, அத்தகைய அலுவலருக்கெதிரான எவையேனும் வழக்கு நடவடிக்கைககள் ஆகக் குறைந்த தாமதத்துடன் தொடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

சான்றளிப் பதற்கான பொறுப்பு.

7ஔ. காவற்றா துப் பணியகமொன்றின் உறுப் பினர்கள், நீதிமுறை அல்லது நிருவாக வழக்கு நடவடிக்கைகளில் சாட்சிக்காரர்களாக வருகைதரும் படி கோரப்படலாம் என்பதுடன், எவரேனும் காவற்றா து அலுவலர்கள், அவர்களின் அலுவலக முறையான பணிகளைப் பிரயோகித்தல் சம்பந்த மான ஏதேனும் கருமம் தொடர்பாகத் தவிர அல் லது ஏதேனும் அலுவலகமுறையான ஆவணத்தை அல்லது கடிதத் தொடர்பைக் காண்பிக்கும்படி அவர்கள் தேவைப்படுத்தப்படுமிடத்துத்தவிர, சான்றளிப்பதற்கு மறுத்தலாகாது.

சிறப்புரிமை களையும் விடுபாட்டுரி மைகளையும் தள்ளுபடி செய்தல்.

7க. பிரிவு 7ஓ இன் (1) ஆம், (3) ஆம் உட்பிரிவு களிலும் பிரிவு 7ஔ என்பதிலும் ஏற்பாடு செய் யப்பட்ட சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும், காவற்றா துப் பணியக உறுப்பினரொருவர் தொடர் பாக, அனுப்பும் அரசு, ஏற்கும் அரசுக்கு அத்தகைய பொருள்பட எழுத்திலான கடிதத் தொடர் பொன்றை அனுப்புவதன்மூலம், அனுப்பும் அரசி னால் எந்நேரத்திலும் தள்ளுபடி செய்யப்பட லாம்.

விலக்களிப்புகள்.

7ங. (1) காவற்றூது அலுவலர்களும் காவற்றூது ஊழியர்களும் அவர்களின் குடும்பவுறுப்பினர் களும், ஏற்கும் அரசில் அந்நியர்களைப் பதிவு செய்தலும் வதிவு அனுமதிப்பத்திரங்குளும் தொடர் பான ஏதேனும் கடப்பாட்டிலிருந்து விலக்களிக்கப் படுதல் வேண்டும்.

(2) காவற்றூதுப் பணியகங்களின் உறுப்பினர் களும் அவர்களின் குடும்பவுறுப்பினர்களும், அனுப்பும் அரசுக்கு அவர்களினால் அளிக்கப் படும் சேவைகள் தொடர்பில் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) காவற்றூது அலுவலர்களும் காவற்றூது ஊழியர்களும் அவர்களின் குடும்பவுறுப்பினர் களும், பின்வரும் விடயத்திற்றவிர, எல்லா வருமதி களிலிருந்தும் வரிகளிலிருந்தும் விலக்களிக்கப் படுதல் வேண்டும் :—

(அ) நேரடியாகவல்லாத வரிகள் ;

(ஆ) ஏற்கும் அரசில் அமைந்துள்ள தனிப்பட்ட அசைவற்ற ஆதனத்தின்மீதான வருமதிகள் ;

(இ) வழியுரிமை அல்லது மரபுரிமை வருமதிகள் ;

(ஈ) தனிப்பட்ட வருமானத்தின் மீதான வருமதி களும் வரிகளும் ;

(உ) குறித்த சேவைகள் மீது அறவிடப்படும் இறுப்பனவுகள் ; அத்துடன்

(ஊ) பதிவுக் கட்டணங்கள், ஈட்டுக் கட்டணங்கள், முத்திரைத் தீர்வைகள் மற்றும் நீதிமன்றப் பதிவேட்டுக் கட்டணங்கள்.

(4) ஏற்கும் அரசானது, அதன் சட்டங்களுக் கிணங்க, பின்வருவன தொடர்பிலான களஞ்சியப் படுத்துகைக்கான அல்லது அதையொத்த சேவை களுக்கான இறுப்பனவுகள் தவிர்ந்த வேறெல்லாச் சுங்கத் தீர்வைகளும், வரிகளும், மற்றும் தொடர்பு பட்ட இறுப்பனவுகளும் என்பவற்றிலிருந்து விலக் களிப்பு வழங்கலாம் —

(அ) காவற்றூதுப் பணியகத்தின் அலுவலக முறையான பயன்பாட்டுக்கான பொருட்கள்;

(ஆ) காவற்றூது அலுவலரொருவரின் அல் லது அவரது குடும்பவுறுப்பினர்களின் தாபனத்துக்கான பொருட்கள் உட்பட அவரது சொந்தப் பயன்பாட்டுக்கான பொருட்கள், நுகர்வுக்கு எண்ணப்பட்ட பொருட்கள், அவை தொடர்பாக ஏற்கும் அரசின் எவையேனும் விதிகளினால் அல்லது ஒழுங்குவிதிகளினால் விதிக்கப் பட்ட அளவுகளை விஞ்சுதலாகாது.

(5) ஏற்கும் அரசானது, காவற்றூதுப் பணியகத் தின் உறுப்பினர்களையும் அவர்களின் குடும்ப வுறுப்பினர்களையும் எல்லாத் தனியாளுக்குரிய சேவைகளிலிருந்தும் இராணுவக் கடப்பாடுகளிலி ருந்தும் அல்லது உதவுதொகைகளிலிருந்தும் விலக் களித்தல் வேண்டும்.

(6) காவற்றூதுப் பணியகமொன்றின் உறுப் பினர் அல்லது அவரது குடும்பவுறுப்பினர் ஒருவர் இறக்கும்பட்சத்தில், ஏற்கும் அரசு, தடைசெய்யப் படக்கூடிய எவையேனும் பொருட்கள் அல்லாத அவரது அசைவுள்ள ஆதனம் ஏற்றுமதி செய்யப் படுவதனை அனுமதித்தல் வேண்டுமென்பதுடன், இறந்தவரின் அசைவுள்ள ஆதனத்தின் கைமாற் றங்கள்மீது எவையேனும் தீர்வைகளை அறவிடு தலுமாகாது.

## பாகம் III

## இலங்கையிலுள்ள கௌரவ காவற்றூதுப் பணியகங்களின் விடுபாட்டுரிமைகளும், வசதிகளும், சிறப்புரிமைகளும்

*வளவுகளைப் பாதுகாத்தல்.*

7ஞ. ஏற்கும் அரசானது, கௌரவக் காவற்றூது அலுவலரொருவரினால் தலைமை வகிக்கப்பட்ட எந்தக் காவற்றூது வளவுகளிலிருந்து காவற்றூதுப் பணியகமொன்று அதன் பணிகளை நிறைவேற்றுகின்றதோ அந்தக் காவற்றூது வளவுகளைப் பாதுகாத்தல் வேண்டும்.

*வரி விதிப்பிலிருந்து விலக்களித்தல்.*

7ட. அனுப்பும் அரசின் காவற்றூது வளவுகள், அவர்களின் காவற்றூதுப் பணிகளின்போது புரியப்படும் செயல்கள் தொடர்பில் எல்லாத் தேசிய வரிவிதிப்பிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும் ஆயின், அத்தகைய விலக்களிப்பு, அளிக்கப்படும் : குறித்த சேவைகள் தொடர்பில் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் கொடுப்பனவுக்கு நீடித்தலாகாது.

*காவற்றூதுச் சுவடிக்கூடம் முழுநிறைக் காப்புடையது.*

7ண. கௌரவக் காவற்றூதுப் பணியகத்தின் காவற்றூதுச் சுவடிக்கூடமும் ஆவணங்களும் முழுநிறைக் காப்புடையனவாதல் வேண்டும்.

*சுங்கத் தீர்வைகளிலிருந்து விலக்களித்தல்.*

7த. ஏற்றும் அரசு, அதன் சட்டங்களுக்கிணங்க, கௌரவக் காவற்றூதுப் பணியகத்தின் அலுவலக முறையான பயன்பாட்டுக்காக, அனுப்பும் அரசினால் அல்லது அதன் தூண்டுதலின்பேரில் வழங்கப்படும் களஞ்சியப்படுத்துகைக்கான அல்லது இதையொத்த சேவைகளுக்கான இறுப்பனவுகள் என்பனவற்றைத் தவிர்த்து அவரின் சொந்தப் பயன்பாட்டுக்காக எண்ணப்படின் அவை தொடர்பிலுமான எல்லாச் சுங்கத் தீர்வைகளிலிருந்தும், வரிகளிலிருந்தும், தொடர்புபட்ட இறுப்பனவுகளிலிருந்தும் விலக்களிப்பு வழங்கலாம்.

*குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் தோன்றுதல்.*

7ந. கௌரவக் காவற்றூது அலுவலரொருவருக்கெதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுமிடத்து, அவர், தகுதிவாய்ந்த அதிகாரிகளின் முன்னர் தோன்றுதல் வேண்டும் : எவ்வாறாயினும், அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் அவரது அலுவலக முறையான பதவிக்கு உரிய மரியாதையுடன் நடாத்தப்படுதல் வேண்டும்.

*கௌரவக் காவற்றூது அலுவலர்களைப் பாதுகாத்தல்.*

7ப. ஏற்கும் அரசு, கௌரவக் காவற்றூது அலுவலரொருவருக்கு அவரது பதவிக்கேற்றவாறு எல்லாப் பாதுகாப்பையும் அளித்தல் வேண்டும்.

*விலக்களிப்புகள்.*

7ம. (1) காவற்றூது அலுவலர்களும் காவற்றூது ஊழியர்களும் அவர்களின் குடும்பவுறுப்பினர்களும், ஏற்கும் அரசில் அந்நியர்களைப் பதிவு செய்தலும் வதிவு அனுமதிப்பத்திரங்களும் தொடர்பான ஏதேனும் கடப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏற்கும் அரசு எல்லாத் தனியாளுக்குரிய சேவைகளிலிருந்தும் இராணுவக் கடப்பாடுகளிலிருந்தும் அல்லது உதவுதொகைகளிலிருந்தும் கௌரவக் காவற்றூது அலுவலர்களுக்கு விலக்களித்தல் வேண்டும்.

(3) கௌவரக் காவற்றூது அலுவலரொருவர், அவரது காவற்றூதுப் பணிகளைப் புரிவதற்காக அனுப்பும் அரசிடமிருந்தும் அவர் பெறுகின்ற ஊதியம் மற்றும் வேதனாதிகள் எவையேனுமிருப்பின் அவற்றின்மீதான எல்லா வருமதிகளிலிருந்தும் வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

*7ஈ முதல் 7ஒ வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் இப்பாகத்துக்கு ஏற்புடையனவாதல்.*

7ய. காவற்றூதுப் பணியகங்களின் ஏற்புடையற்பாலனவான இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் 7ஈ முதல் 7ஒ வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், கௌரவ காவற்றூதுப் பணியங்களுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவுக்கு முன்னர் தலையங்கத்தை உட்புகுத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அச்சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவுக்கு நேர்முன்னர் பின்வரும் தலையங்கத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"பாகம் VI

**பொது"**

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 8அ மற்றும் 8ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 8அ மற்றும் 8ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*"ஏற்கும் அரசின் சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் மதிப்பளித்தல்.*

8அ. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த ஆட்களுக்கு ஏற்புடையனவாகின்றனவோ அந்த ஆட்களினால் அனுபவிக்கப்படும் சிறப்புரிமைகளுக்கும் விடுபாட்டுரிமைகளுக்கும் பங்கமின்றி, அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் ஏற்கும் அரசின் சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் மதிப்பளித்தல் வேண்டும். ஏற்கும் அரசின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருப்பதற்குமான கடமையொன்றையும் அவர்கள் உடையவர்களாகவிருத்தல் வேண்டும்.

(2) காவற்றூ துப் பணிகளைப் பிரயோகிப்பதற்கு ஒவ்வாதிருக்கும் ஏதேனும் முறையில் காவற்றூ து வளவுகள் பயன்படுத்தப்படுதலாகாது.

*காவற்றூ து அலுவலர்கள், ஏற்கும் அரசின் நாட்டவர்களாக உள்ளவிடத்து வரையறுக்கப்பட்ட விடுபாட்டுரிமை.*

8ஆ. ஏற்கும் அரசின் நாட்டவர்களாகவுள்ள அல்லது அவ்வரசில் நிரந்தரமாக வதிகின்ற காவற்றூ து அலுவலர்கள், அவர்களது பணிகளைப் பிரயோகிக்கையில் புரியப்படும் அலுவலக முறையான செயல்கள் தொடர்பில் நியாயாதிக்கத்திலிருந்தான விடுபாட்டுரிமையையும் சொந்த முழுநிறைக் காப்பையும் மட்டுமே அனுபவித்தல் வேண்டும்.".

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் II ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் II ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"காவற்றூதுப் பணிகள்" மற்றும் "காவற்றூது அலுவலர்" என்னும் சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணங்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன்மூலமும் :—

"காவற்றூது சுவடிக்கூடம்" என்பது, காவற்றூதுப் பணியகத்தின் எல்லாப் பத்திரங்களையும், ஆவணங்களையும், கடிதத் தொடர்புகளையும், புத்தகங்களையும், திரைப்படங்களையும், நாடாக்களையும், இடாப்புக்களையும், அவற்றின் பாதுகாப்புக்கும் அல்லது சேமக்காப்புக்கு எண்ணப்பட்ட மறைகுறியீடுகளையும், குறியீடுகளையும், அட்டைச்சுட்டிகளையும், ஏதேனும் தளபாடப் பொருளையும் சேர்த்து உள்ளடக்கும்;

"காவற்றூதுப் பணிகள்" என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் காவற்றூதுப் பணி அல்லது இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் காவற்றூது பணி என்று பொருளாகும் என்பதுடன், இச்சட்டத்தின் 3, 4, 5, 6, 7 ஆகிய பிரவுகளில் குறிப்பீடுசெய்யப்படும் ஏதேனும் பணியையும் மேலதிகமாக உள்ளடக்கும் ;

"காவற்றூது அலுவலர்" என்பது, காவற்றூதுப் பணிகளைப் பிரயோகித்தல் பொறுப்பிக்கப்பட்ட, காவற்றூதுப் பணியகமொன்றின் தலைவர் உட்பட்ட எவரேனுமாள் என்று பொருளாகும் ;

"காவற்றூதுப் பணியகம்" என்பது, ஏதேனும் காவற்றூதுத் தலைமையலுவலகம், காவற்றூது அலுவலகம், காவற்றூது துணையலுவலகம், காவற்றூது முகவர் நிலையம் அல்லது கௌரவக் காவற்றூது அலுவலகம் என்று பொருளாகும்;

"காவற்றூது வளவுகள்" என்பது, சொத்தாண்மையைப் பொருட்படுத்தாது, புறநீங்கலாக அலுவலகத்தின் காவற்றூது நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் கட்டிடங்கள் அல்லது கட்டிடங்களின் பாகங்கள் மற்றும் அவற்றுக்குத் துணைமையான காணி என்று பொருளாகும்.".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்